# கிருபையுள்ள வார்த்தை®

## KIRUBAIYULLA VAARTHAI

லூக்கா (LUKE) 4:22

Vol - 22 | November நவம்பர் | 2021

ஆண்டு சந்தா ரூ. 120/- | தனிப் பிரதி ரூ. 10/- | வெளிநாட்டு சந்தா ரூ. 600/-




கௌரவ ஆசிரியர் BETTY CHOATE    ஆசிரியர் பிலேமோன் ராஜா

புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்தை மீட்டமைக்கும் இதழ்

## இதழின் உள்ளே...


| | |
|---|---|
| ஆசிரியர் உரை | 3 |
| பெண்கள் பகுதி | 8 |
| வாலிபர் பகுதி | 11 |
| சிறுவர் பகுதி | 12 |



*In memory of J.C. CHOATE*

*Guest Editors :* **Betty Choate, Jerry & Paula Bates**

*Editor :* **PHILEMON RAJAH**

**ஆசிரியர் குழு**

**V. கிங்ஸ்லிராஜா**, M.Th.,
**R. ஆன்டனி ராஜா**, D.Th.,M.B.A (Bible Studies)
**Dr. V.S. இம்மானுவேல்**, M.Sc., D.D., **C. ஜெபாசிலன் கார்த்திக்**, B.Sc.,
**P. பேபி ராஜா** D.Th., **E. ஜோசப் பிரதீப்** B.Th.,

**சட்ட ஆலோசகர்கள்**
அட்வகேட் B. கருப்பசாமி பாண்டியன் B.A., B.L
அட்வகேட் V. சுப்பிரமணியன் M.A., B.L


## கிருபையுள்ள வார்த்தை TV நிகழ்ச்சிகள்

**நம்பிக்கை T.V. யில்**

**ஞாயிறு மதியம் 3:30 மணி**

**தமிழன் T.V. யில்**

**ஞாயிறு காலை 7:00 மணி**

செய்தியாளர்கள்

போதகர். **பிலேமோன்ராஜா**, M.A., M.Th.,
(Director - J.C. School of Evangelism)
சகோ. **கிங்ஸ்லி ராஜா**, M.Th.,
(இணை ஆசிரியர் – கிருபையுள்ள வார்த்தை)

**OUR ENGLISH TV PROGRAM**

**SALVATION TV**

**Every Sundays 2pm**

**Speakers:**

**Jerry Bates & Kingsly Rajah**




**கிருபையுள்ள வார்த்தை புதிய வெளியீடு**

**கிருபையின் கீதங்கள்**

**விபரங்களுக்கு :**

**92 4421 4421, 92 4431 4431**


**பாடல் புத்தகம்**

421 பக்கங்கள்
514 தமிழ் பாடல்கள்
29 ஆங்கில பாடல்கள்
100 சிறுவர் பாடல்களுடன்

**கிருபையுள்ள வார்த்தை**

நம்மை கிறிஸ்துவின் உபதேசத்தில்
நிலை நிற்க செய்யும் வார்த்தை

**World Literature Publication**
Post Box No. 15, Arasaradi, Madurai 625 016. India




**Send Postal Expenses only**
**and**
**receive**
**The Voice of Truth International**

# அப்போஸ்தலருடைய நடபடிகளில் முதல் நூற்றாண்டு சபை...

ஆசிரியர் உரை

P.C. பிலேமோன் ராஜா



*சத்தியத்தினை நேசிக்கின்ற கிருபையுள்ள வார்த்தை வாசகர்கள் அனைவருக்கும் சத்தியபரன் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் எனது அன்பின் வாழ்த்துக்கள்.*

இந்த மாதம் அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்திலிருந்து ஆராய்ச்சி செய்வோம்.

இந்த புத்தகம், புதிய ஏற்பாட்டில் ஐந்தாவது புத்தகமாக வருகின்றது. இதை எழுதியவர் மருத்துவராகிய லூக்கா **(அப் 1:1-2)**, 'மகாகனம் பொருந்திய தெயோப்பிலு' என்பவருக்கு எழுதுகின்றார். இந்த புத்தகம் லூக்கா நற்செய்தி நூலின் தொடர்ச்சியாக உள்ளது. லூக்கா, நற்செய்தி நூலை ஆண்டவர் இயேசு பரமேறி சென்றதுடன் முடித்திருப்பார் **(லூக் 24:51-53):** இந்த நூலை, ஆண்டவர் பரமேறி செல்வதிலிருந்து ஆரம்பித்திருப்பார் **(அப் 1:3-11)**.

இந்த புத்தகம் அப்போஸ்தலருடைய நடபடிகள் என்று அழைக்கப்பட்டாலும், 12 அப்போஸ்தலர்களின் ஊழியங்களைப் பற்றியும் பேசுவதில்லை. 1 முதல் 12 அதிகாரங்கள் பெரும்பாலும் அப்போஸ்தலனாகிய பேதுருவின் ஊழியமும், 13 முதல் 28 அதிகாரங்கள் பெரும்பாலும் சிறப்பு அப்போஸ்தலாகிய பவுலின் ஊழியத்தினை பற்றியும் பேசுகின்றன. ஏறக்குறைய 35 ஆண்டு கால வரலாற்றை இப்புத்தகத்தில் பதிவு செய்துள்ளனர் (கி.பி. 33 - 67). கிறிஸ்துவின் சபையானது பலத்தோடே நிறுவப்பட்டதிலிருந்து, எவ்வளவு வீரியமாக உலகமெங்கும் வளர்ந்து பெருகினது என்பதை இப்புத்தகம் நமக்கு தெளிவுப்படுத்துகின்றது.

இந்த புத்தகத்தில், மனமாற்ற நிகழ்வுகள் நிறைய பதிவு செய்யப்பட்டிருக்கின்றது. அதைக் குறித்து படிப்பது மிகவும் ஆழமான பாடம், சுருக்கமாக சொல்வதென்றால், ஒருவர் முதலாவது சத்தியத்தினை கேட்க வேண்டும்! ஏன் முதலாவது சத்தியத்தினை கேட்க வேண்டும்? ஏனெனில், ஏவாள் பாவம் செய்ய காரணம், முதன் முதலில் சாத்தான் சொன்ன 'பொய்யை' காது கொடுத்து கேட்டாள். அடுத்ததாக, நாம் கேட்ட சத்தியத்தினை மனதார விசுவாசிக்க வேண்டும், மாறாக, ஏவாள் பொய்யை மனதார நம்பினாள். அடுத்ததாக, செய்த பாவங்களிலிருந்து மனந்திரும்ப வேண்டும். அடுத்து, தனது விசுவாசத்தினை வாயினால் அறிக்கை செய்ய வேண்டும். பிறகு, பாவ மன்னிப்பிற்கென்று கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கட்டளைபடி **(மத் 28:1-20)**, பிதா, குமாரன் பரிசுத்த ஆவியானவரின் பெயராலே திருமுழுக்கு பெற வேண்டும்.

இந்த புத்தகத்தில், அநேகரால் பெரிதாக கவனிக்கப்படாத, ஆனால், கற்றுக்கொள்ள வேண்டிய சில நபர்கள் இருக்கின்றனர். அவர்களை பற்றி படிப்பதும், அவர்களிடமிருந்து எச்சரிக்கையின் செய்தியையும், உற்சாக பாடத்தினையும் கற்றுக் கொள்வதும், நமது ஆத்மீக வாழ்வை கர்த்தருக்குள் வளர்க்க உதவியாக இருக்கும்.அவர்களில் சிலர்...

## 1. முதல் நூற்றாண்டு சபையார்

### அ) உறுதியான விசுவாசம்

**(அப் 2:42)** "அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்."

முதல் நூற்றாண்டு சபையார் உறுதியான விசுவாசம் உடையவர்களாக இருந்தனர். அவர்களது விசுவாச உறுதியை பல்வேறுபட்ட நிகழ்ச்சியின் வாயிலாக நாம் அறிந்துகொள்ள முடியும். எவ்வளவோ துன்பங்களையும், உபத்திரவங்களையும், போராட்டங்களையும் சந்தித்த போதும், தங்களது விசுவாசத்தில், தாங்கள் கற்றுக்கொண்ட உபதேசத்தில் உறுதியாக இருந்தனர்.

### அ) கொடுப்பதில் உற்சாகம்

**(அப் 2:44, 45)** "விசுவாசிகளெல்லாரும் ஒருமித்திருந்து, சகலத்தையும் பொதுவாய் வைத்து அனுபவித்தார்கள்.

காணியாட்சிகளையும் ஆஸ்திகளையும் விற்று, ஒவ்வொருவனுக்கும் தேவையானதற்குத்தக்கதாக அவைகளில் எல்லாருக்கும் பகிர்ந்து கொடுத்தார்கள்."

அவர்கள் கொடுக்கின்ற காரியத்தில் மிகவும் உற்சாகமாக இருந்தனர். தங்களையே கர்த்தருக்கு கொடுத்தவர்களுக்கு, தங்களுடையதை கொடுப்பது ஒன்றும் பெரிய காரியம் இல்லை. சபையின் தேவைக்குதக்கதாக, நற்செய்தி பரவ தேவையான எல்லாவற்றையும் சந்திக்க, தங்களை தாங்களே கர்த்தருக்குள் உற்சாகப்படுத்திக் கொண்டதால் தான், அவர்களால் அவ்வாறு செய்ய முடிந்தது என்பதை நாம் அறிய முடிகின்றது. ஆண்டவருக்கு கொடுப்பதில் ஒருவர் நேர்மையாக இல்லாதவராக இருந்தால், அவர் ஆண்டவருக்கு தன்னை கொடுப்பதிலும் நேர்மையற்றவராகவே இருக்கின்றார். அப்படிப்பட்டவர்களை விட்டு விலகி நிற்பது நம் விசுவாசத்தினை காக்க உதவியாக இருக்கும்.

### இ) கர்த்தரோடு நெருக்கம்

**(அப் 2:46–47)** "அவர்கள் ஒருமைப்பட்டவர்களாய்த் தேவாலயத்திலே அனுதினமும் தரித்திருந்து, வீடுகள் தோறும் அப்பம்பிட்டு, மகிழ்ச்சியோடும் கபடமில்லாத இருதயத்தோடும் போஜனம் பண்ணி, தேவனைத் துதித்து, ஜனங்களெல்லாரிடத்திலும் தயவு பெற்றிருந்தார்கள். இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அனுதினமும் சபையில் சேர்த்துக்கொண்டு வந்தார்."

அனுதினமும் கர்த்தரை தேடுவதிலும், துதிப்பதிலும் பேரார்வம் கொண்டிருந்தனர். கர்த்தரோடு தங்கள் வாழ்வை நெருக்கமாக்கி கொள்ள தேவையானவற்றை எல்லாம் தேடி, விரும்பி செய்தனர். ஒரு பாடல் வரி தான் ஞாபகத்திற்கு வருகின்றது...

"முழங்காலில் நிற்க வேதத்தை அறிய
தினந்தோறும் தேவா உணர்த்தும்
உமக்கும் எனக்கும் இடையில் எதுவும்
என்றுமே வராமல் காத்திடும்"

இது பாடல் மாத்திரமல்ல, ஆண்டவரை நேசிக்கின்ற அநேகரின் ஜெபமாகவும் இருக்கும் என்பதில் ஐயமில்லை.

## சிறுவர் பகுதி பதில் எழுதியவர்கள்

1. A. கார்பஸ் பிலேமோன் – மதுரை
2. M. ராஜா – கரூர்
3. M. ஜோனா – கரூர்
4. S. கனிஸ்கா – கரூர்
5. S. லக்ஷிதா – கரூர்
7. P. அன்னாள் – மதுரை
8. P. டேனியல் – மதுரை
9. A. ஹானா ஜோதி – மதுரை

### ஈ) நற்செய்தியை பரப்புவதில் பேராவல்

**(அப் 8:3–4)** "சவுல் வீடுகள் தோறும் நுழைந்து, புருஷரையும் ஸ்திரீகளையும் இழுத்துக் கொண்டுபோய், காவலில் போடுவித்து, சபையைப் பாழாக்கிக் கொண்டிருந்தான். சிதறிப்போனவர்கள் எங்குதிரிந்து, சுவிசேஷ வசனத்தைப் பிரசங்கித்தார்கள்."

சிதறிப்போனவர்கள், அடிபட்டு, காயம்பட்டு ஓடினபோது, தாங்கள் போய் சந்தித்த மக்களிடத்தில் தங்களது காயங்களையும், போராட்டங்களையும், உபத்திரவத்தினையும், வலிகளையும் பற்றி பேசாமல், எங்கும் திரிந்து நற்செய்தியை சொன்னார்கள் என்பதிலிருந்து அவர்களது பேராவலை நாம் அறிந்துகொள்ள முடிகின்றது. நற்செய்தியை நானிலமெங்கும் பரவ செய்வது நம் ஒவ்வொருவரின் பிரதான கடமை. ஏனெனில் கிறிஸ்து நமக்கு கொடுத்த பிரதான கட்டளை இதுவாகும் **(மாற்கு 16:15; 1 கொரி 9:16)**. தினந்தோறும் நமது அன்றாட செயல்களில் நற்செய்தி சொல்வதும் ஒன்றாக இருக்க வேண்டும். அதற்காக ஜெபிக்க வேண்டும் மற்றும் முயற்சிக்க வேண்டும்.

## 2. ஆத்தும தூக்கம் கொண்ட ஐத்திகு

**(அப் 20:9)** "அப்பொழுது ஐத்திகு என்னும் பேர்கொண்ட ஒரு வாலிபன் ஜன்னலில் உட்கார்ந்திருந்து, பவுல் நெடுநேரம் பிரசங்கம் பண்ணிக்கொண்டிருக்கையில், மிகுந்த தூக்கமடைந்து, நித்திரைமயகத்தினால் சாய்ந்து, மூன்றாம் மெத்தையிலிருந்து தீழே விழுந்து, மரித்தவனாய் எடுக்கப்பட்டான்."

பவுல் நெடுநேரம் பிரசங்கம் செய்தார்; அதனால் அல்லது, உடல் சோர்வினால் ஐத்திகு

தூங்கியிருக்கலாம், இது போய் பெரிய பிரச்சனையா? என நாம் நினைக்கலாம். அதுவல்ல, கர்த்தருடைய வசனம் காதில் கேட்காதபடி, நம்மில் அநேகர் ஆவிக்குரிய வகையில் தூங்கிகொண்டு தான் இருக்கின்றோம். அதெல்லாம் கிடையாது! நாங்கள் தினமும் பைபிள் படிக்கிறோம், சபைக்கூட்டங்களில் தவறாது பங்கு பெறுகின்றோமே என நீங்கள் சொல்வது எனக்கு கேட்கின்றது. சரி? அப்படி கேட்ட வசனங்களால் நம் குணம், நாம் வாழும் முறை மாறியிருக்கின்றதா? இல்லையெனில், நாமும் காதில் நுழைந்த வசனம் இருதயத்தில் நுழையாதபடி ஆவிக்குரிய தூக்கம் தூங்கிக்கொண்டிருக்கின்றோம். இது ஆபத்தானது! சத்துருகளைகளை விதைக்க' ஏதுவாகும் **(மத் 13:25)**. வேத வசனங்கள் உள்ளே செல்லவில்லை எனில், இந்த உலகத்தின் பாவங்கள் உள்ளே சென்றுவிடும் அபாயம் இருக்கின்றது. வசனங்களை நாம் வாசிப்பதற்கும், தியானிப்பதற்கும் மாத்திரமல்ல, நம்மை திருத்துவதற்கும் பயன்படுத்துவோம். **(எபே 5:14)** "ஆதலால், தூங்குகிற நீ விழித்து, மரித்தோரை விட்டு எழுந்திரு, அப்பொழுது கிறிஸ்து உன்னைப் பிரகாசிப்பிப்பாரென்று சொல்லியிருக்கிறார்".

## 3. நேர்மையற்ற பேலிக்ஸ், துருசில்லா

**(அப் 24:24-27)** "சில நாளைக்குப்பின்பு பேலிக்ஸ் யூதஸ்திரீயாகிய தன் மனைவி துருசில்லாளுடனேகூட வந்து, பவுலை அழைப்பித்து, கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தைக் குறித்து அவன் சொல்லக்கேட்டான்.அ வன்,நீ தியையும்,இ ச்சையடக்கத்தையும், இனிவரும் நியாயத்தீர்ப்பையும் குறித்துப் பேசுகையில், பேலிக்ஸ் பயமடைந்து: இப்பொழுது நீ போகலாம், எனக்குச் சமயமானபோது உன்னைஅ ழைப்பிப்பேன்எ ன்றான்.ே மலும்,அ வன்ப வுலை விடுதலை பண்ணும்படி தனக்கு அவன் பணங்கொடுப்பானென்று நம்பிக்கையுள்ளவனாயிருந்தான்; அதினிமித்தம் அவன் அநேகந்தரம் அவனை அழைத்து, அவனுடனே பேசினான். இரண்டு வருஷம் சென்றபின்பு பேலிக்ஸ் என்பவனுக்குப் பதிலாய்ப் பொர்க்கியுபெஸ்து தேசாதிபதியாக வந்தான்; அப்பொழுது பேலிக்ஸ் யூதருக்குத் தயவுசெய்ய மனதாய்ப் பவுலைக் காவலில் வைத்துவிட்டுப் போனான்."

இவர்கள் இருவரும் வசனத்தினை கேட்க, அதாவது ஆண்டவரைப் பற்றி அறிந்துகொள்ள ஆர்வம் காட்டினான். இயேசுவைப் பற்றி அறிய அறிய, அவன் தன்னை மாற்றிக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு வசனம் அவனை அழுத்தும் போது, அவன் கர்த்தருடைய வார்த்தையை புறந்தள்ளினான். இன்னொரு முறை பார்க்கலாம் என்றான். இது அவனது தைரியமின்மையை காண்பிக்கின்றது. அது மாத்திரமல்ல, பவுல் நீதிமான் என தெரிந்தும் அவனை விடுதலையாக்கும் தைரியமற்றவனாக இருந்தான். பவுலிடம் லஞ்சம் வாங்க ஆர்வமுடையவனாக இருந்தான். எவ்வளவு பெரிய நேர்மையற்ற செயல்! வசனத்தினை கேட்ட பிறகும் தன்னை அதற்கு ஒப்புக்கொடுக்காததினால், இவன் நேர்மையற்றவனாக இருந்தான். வசனங்களை கேட்ட பிறகும் தன்னை மாற்றிக்கொள்ள அவன் விரும்பவில்லை; மாறாக, வசனத்தினை போதித்த ஊழியக்காரனை பாவம் செய்ய தூண்டக் கூடியவனாக, அவனிடமிருந்து லஞ்சம்பெற ஆர்வமுள்ளவனாக இருந்திருக்கின்றான். கர்த்தருடைய வார்த்தையினை கேட்ட பிறகும், தன்னை மாற்றிக்கொள்ளாத ஒவ்வொருவரும் நேர்மையற்றவர்களாகவே இருக்கின்றோம். பேலிக்ஸ், பிறகும் கூட நீதிமான் பக்கம் நிற்க நேர்மையற்றவனாக, யூதருக்கு தயை செய்ய பவுலை காவலில் போடுவித்தான். நாம் ஏன் பைபிள் படிக்கின்றோம் அல்லது படிக்க வேண்டும்? இந்த அடிப்படை கேள்விக்கு பதில் அறிந்திருந்தோமானால், வசனம் நம்மை மாற்ற ஒவ்வொரு முறையும் நம்மை நாமே ஒப்புக்கொடுக்கிறவர்களாக

அன்புடன்
**ஆசிரியர்**

## சிறுவர்க்கான கேள்விகள்

1. பாவம் மன்னிக்கப்பட என்ன செய்ய வேண்டும் என பேதுரு சொன்னார்?
2. அந்த நாளில் எத்தனை பேர் திருந்தி, என்ன செய்தார்கள்?
3. ஸ்தேவான் ஏறக்குறைய எத்தனை ஆண்டு வரலாற்றை பேசினார் ?
4. சிறைச்சாலை அதிகாரி பவுலிடம் என்ன கேட்டார்?
5. நடுராத்திரியில் சிறைச்சாலை அதிகாரியும், அவர் குடும்பமும் என்ன செய்தனர்?

# லீதியாள்

சகோதரி : பேபி ராஜா



கிறிஸ்துவுக்குள் அருமையான சகோதரிகளுக்கு இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தினாலே என்னுடைய வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

வேதாகமத்தில் உள்ள பெண்களைப் பற்றி படித்துக் கொண்டே வருகின்றோம். இந்த முறை அப்போஸ்தலர் நடபடிகளில் சொல்லப்பட்டுள்ள லீதியாளை குறித்து பார்ப்போம்.

### 1. ஆவிக்குரிய நட்பு வட்டாரத்தினை கொண்டிருந்தாள்

**லூக்கா 16:13** "ஓய்வுநாளில் நாங்கள் பட்டணத்துக்கு வெளியே போய், ஆற்றினருகே வழக்கமாய் ஜெபம் பண்ணுகிற இடத்தில் உட்கார்ந்து, அங்கே கூடிவந்த ஸ்திரீகளுக்கு உபதேசித்தோம்."

லீதியாள் ஆவிக்குரிய நட்பு வட்டாரத்தினை கொண்டிருந்தாள். பவுல் உபதேசம் செய்யும்போது, லீதியாளும் அவளது தோழிகளும் அவற்றை கேட்க கூடியவர்களாக இருந்தனர். தான் மாத்திரம் வசனத்தினை கேட்பவளாக இல்லாமல், தன்னை போலவே வசனத்தின் மீது வாஞ்சையுள்ளவர்களுடனே அவள் நட்பு பாராட்டியுள்ளாள் என்பதை நாம் அறிய முடிகின்றது. நமது நட்பு வட்டாரம் எப்படி பட்டது? என்பதை சிந்திப்போம்!

### 2. திறந்த மனதுடன் வசனத்தினை படித்தாள்

**லூக்கா 16:14** "அப்பொழுது தியத்தீரா ஊராளும் இரத்தாம்பரம் விற்கிறவளும் தேவனை வணங்குகிறவளுமாகிய லீதியாள் என்னும் பேருள்ள ஒரு ஸ்திரீ கேட்டுக்கொண்டிருந்தாள்; பவுல் சொல்லியவைகளைக் கவனிக்கும்படி கர்த்தர் அவள் இருதயத்தைத் திறந்தருளினார்."

லீதியாள் வசனத்தினை கேட்கிறவளாக மாத்திரம் இல்லாமல், அவைகளை திறந்த மனதுடன் கற்றுக் கொள்ள கூடியவளாக இருந்தாள். வசனத்தினை கற்கும் போது, எல்லோருக்கும் அவசியமாக இருக்க வேண்டிய மனோநிலை இது. நாம் வசனத்தினை அறிவது எவ்வளவு முக்கியமோ, அந்த வசனத்தின் சத்தியத்தினை அறிவதும் மிகவும் முக்கியமானது. நாம் அறிந்துள்ள வசனத்தின் சத்தியத்தினை புரிந்துள்ளோமா? என்பதனை நிதானிப்போம்!

### 3. குடும்பமாக கர்த்தருக்கு கீழ்ப்படிந்தாள்

**லூக்கா 16:15** "அவளும் அவள் வீட்டாரும் ஞானஸ்நானம் பெற்ற பின்பு, அவள் எங்களை நோக்கி; நீங்கள் என்னைக் கர்த்தரிடத்தில் விசுவாசமுள்ளவளென்று எண்ணினால், என் வீட்டில் வந்து தங்கியிருங்கள் என்று எங்களை வருந்திக் கேட்டுக்கொண்டாள்."

கர்த்தருடைய வசனத்தினை திறந்த மனதுடன் கேட்பவர்களின் அடுத்த செயல் என்பது, கற்றுக்கொண்ட சத்தியத்திற்கு உடனே கீழ்படிவதாக இருக்கும். லீதியாள் அதற்கு அடுத்தபடி மேலே சென்று, அந்த சத்தியத்தினை தன் குடும்பத்தினருக்கும் வெளிப்படுத்தி, குடும்பமாக கர்த்தருக்கு கீழ்ப்படிந்தாள். நாமும் ஆண்டவருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிவோம். நம் குடும்பத்தினரும் கர்த்தரை நெருங்கி வர உதவியாக இருப்போம்!

### 4. கர்த்தருடைய ஊழியர்களை போஷித்தாள்

**லூக்கா 16:15** "அவளும் அவள் வீட்டாரும் ஞானஸ்நானம் பெற்ற பின்பு, அவள் எங்களை நோக்கி; நீங்கள் என்னைக் கர்த்தரிடத்தில் விசுவாசமுள்ளவளென்று எண்ணினால், என் வீட்டில் வந்து தங்கியிருங்கள் என்று எங்களை வருந்திக் கேட்டுக்கொண்டாள்."

கர்த்தருக்கு மிகவும் பிடித்த செயல், அவருடைய ஊழியர்களை போஷிப்பது. லேவியனை கைவிடாதே என்று அடிக்கடி யூதர்களுக்கு கட்டளையிட்டார். புதிய ஏற்பாட்டிலும், கர்த்தர், செய்யும் படி அறிவுறுத்துகின்ற ஒரு செயல் இது. **(1 கொரி 9, கலா 6:6).** லீதியாள் கர்த்தருடைய ஊழியர்களை விருப்பப்பட்டு, ஆர்வத்துடன் போஷித்தாள்.

அன்பான சகோதரிகளே, லீதியாளிடமிருந்து ஆவியானவர் நமக்கு கற்றுத்தந்ததை பயிற்சி செய்வோம். கர்த்தரை மகிமைப்படுத்துவோம்! ஆசீர் பெறுவோம்!

# பிலிப்பு & பர்னபா

நியாயாதிகள் 7:8-21

பிரியமான வாலிப சகோதர சகோதரிகளே ! உங்கள் அனைவருக்கும் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். நம் அன்றாட வாழ்க்கையில் ஒரு சிலரின் வியக்க வைக்கும் செயல்பாடுகள், நம்மை அவர்கள் பக்கமாக திரும்ப வைக்கின்றது. அதிலும் நல்ல பயனுள்ளவை என்றால், அவற்றை நம் வாழ்விலும் செயல்படுத்தி பார்ப்பது இயல்பே. அப்படிப் போலவே வேதாகமத்திலும் உள்ள நபர்கள், நம்மை வியக்க வைக்கும் அளவிற்கு தேவ உதவியுடன் செயல்பட்டிருக்கின்றனர். அப்போஸ்தலர் நடபடிகளில் சொல்லப்பட்டுள்ள அப்படிப்பட்ட நபர்களில் இருவரைப் பற்றி தெரிந்துகொள்வோம்.

## 1. பிலிப்பு

அப் 6-ம் அதிகாரத்தில் பிலிப்பு என்னும் ஒரு வாலிப சகோதரனைப் பற்றி படிக்க முடிகின்றது. அவன் அந்த சபையில் பந்தி விசாரிப்புக்கென்று விசேஷித்த முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட உதவிக்காரர் ஆவார். இந்த பிலிப்பு பற்றி பைபிள் கொடுக்கின்ற சாட்சி பிரமிப்பானது.

1. பரிசுத்த ஆவியும், ஞானமும் நிறைந்து, நற்சாட்சி பெற்ற ஒருவர் **(அப் 6:32).**
2. விசுவாசமும் பரிசுத்த ஆவியும் நிறைந்தவர் **(அப் 6:5).**
3. கர்த்தரோடு நெருங்கிய உறவில் இருந்தவர் **(அப் 8:26).**
4. எப்பொழுதும் கர்த்தருடைய வசனத்தை சொல்ல ஆயத்தமாயிருந்தார். **(அப் 8:5).**
5. கேள்வி கேட்காத கீழ்படிதல் உடையவன். **(அப் 8:27, 29).**
6. தேவ வசனத்தை எப்படி கைக்கொள்வது என்பதை அறிந்திருந்தான். **(அப் 8:30, 35).**

பாருங்கள், இந்த பிலிப்பு என்பவன் ஒரு சிறந்த குணாதிசயத்தை வெளிப்படுத்தவில்லை. அவன் வெளிபடுத்திய ஒவ்வொன்றுமே சிறந்த மற்றும் வியக்கதகும் ஒன்றாகும். ஆவிக்குரிய வாழ்விலே அவைகளையே நாமும் செய்யும்படியாகவும் நம்மை உந்தி தள்ளுகின்ற ஒன்றாக இருக்கிறது.

## 2. பர்னபா

இரண்டாவதாக, நாம் இன்னொருவரைப் பற்றி அப்போஸ்தலர் புத்தகத்தில் இருந்து படிக்கலாம். அவர் 'பர்னபா' என்னும் பேர்கொண்ட 'ஆறுதலின் மகன்'. பெரிய அளவு வசதியுடையவராக இருந்தாலும், இந்த பர்னபா தன்னை திரும்பி பார்க்கும்படியாக, தான் செய்தது என்னவென்றால், அநேகருக்கு ஆறுதல் கூறுவதாக அல்ல, ஆறுதல் செய்தார் என்பதை நாம புரிந்துகொள்ள வேண்டும். இந்த பர்னபா, ஒரு ஊக்கம் அல்லது ஆறுதல் தரும் வார்த்தைகளை வழங்குவதற்காக அறியப்பட்டவர் அல்ல. மாறாக, கர்த்தருடைய பிள்ளைகளின் அவர்களுடைய சோதனைகளில் ஆதரவாக, ஆறுதலாக அவர்களோடு (தேவபிள்ளைகளோடு) நிற்பதற்காக அறியப்பட்டார்.

இந்த பர்னபா உணர்ச்சி ரீதியாக பிரிக்கப்பட முடியாதவராகயிருந்தார். ஆனால் அவர்களின் பிரச்சனை, போராட்ட, சோதனை நேரங்களில் அவர்களுடன் இணைந்தவராக இருந்தார். இவருடைய அறிமுகமே எப்படி அமைகின்றது? வேதாகமத்தை வாசித்துப் பார்த்தால் **(அப் 4:36, 37)** தன்னுடைய நிலத்தை விற்று சபையின் தேவைக்கு கொடுத்தார் என்று பார்க்கிறோம். நம்மை ஒரு நிமிடம் விழிப்பிதுங்கும் அளவிற்கு கர்த்தருக்காக எதையாகிலும் செய்தே ஆக வேண்டும் என்கின்ற கட்டாயத்திற்கு கொண்டு செல்கின்றார், இந்த அசாத்தியமான நபராகிய பர்னபா.

உண்மையிலேயே இந்த இரண்டு நபர்களும் மாபெரும் விசுவாச செயல்பாட்டை செய்து, அநேகரை கர்த்தர் பக்கம் திரும்ப செய்திருக்கின்றனர் என்பதை அவர்களுடைய வாழ்க்கை முறையின் செயல்பாடுகள் நமக்கு வெளிப்படுத்துகின்றது. இந்த பிலிப்பு மற்றும் பர்னபாவைப்போல நாமும் செயல்பட முயற்சி செய்வோம். கர்த்தர் தாமே அந்த முயற்சிகளில் நம் அனைவரோடும் கூட இருப்பாராக!

# அப்போஸ்தலர் நடபடிகள் (1:8)

| பேதுரு | பிலிப்பு சவுல் பேதுரு | பவுல் |
| --- | --- | --- |
| ஸ்தேவான் | கொர்நெலியு, பர்னபா | பூமியின் கடைசிபரியந்தம் ரோம் |
| எருசலேம் | யூதேயா & சமாரியா | |
| முதலாவது யூதர்கள் எருசலேம் | செசரியா அந்தியோகியா | சீலா தீமோத்தேயு புற தேசத்தார் |

# அப். நடபடிகளில் மனமாற்ற நிகழ்வுகள்

| | நிகழ்வுகள் | சுவிசேஷத்தை கேள்விபடுதல் | விசுவாசித்தல் | மனந்திரும்புதல் | கிறிஸ்துவை அறிக்கையிடுதல் | திருமுழுக்கு பெறுதல் |
|---|---|---|---|---|---|---|
| 1 | பெந்தேகொஸ்தே நாள்<br>அப் 2:36–42 | கேட்டனர்<br>2:37 | | மனந்திரும்பினர்<br>2:37–38 | | திருமுழுக்கு பெற்றனர்<br>2:38–41 |
| 2 | சமாரியர்கள்<br>அப் 8:5–13 | கேட்டனர்<br>8:5,6 | விசுவாசித்தனர்<br>8:12 | | | திருமுழுக்கு பெற்றனர்<br>8:12 |
| 3 | சீமோன்<br>அப் 8:13 | கேட்டனர்<br>8:6 | விசுவாசித்தனர்<br>8:13 | | | திருமுழுக்கு பெற்றனர்<br>8:13 |
| 4 | எத்தியோப்பிய மந்திரி<br>அப் 8:36–41 | கேட்டனர்<br>8:6,13 | | | அறிக்கையிட்டனர்<br>8:37 | திருமுழுக்கு பெற்றனர்<br>8:38 |
| 5 | சவுல் (பவுல்)<br>அப் 9:1–9,<br>22:16–16, 26:12–19 | கேட்டனர்<br>22:16 | | | | திருமுழுக்கு பெற்றனர்<br>9:18 |
| 6 | கொர்நெலியு<br>அப் 10:25–48 | கேட்டனர்<br>10:33 | விசுவாசித்தனர்<br>10:43 | | | திருமுழுக்கு பெற்றனர்<br>10:48 |
| 7 | லீதியாள்<br>அப் 16:13–15 | கேட்டனர்<br>16:13–14 | விசுவாசித்தனர்<br>16:14 | | | திருமுழுக்கு பெற்றனர்<br>16:15 |
| 8 | சிறை அதிகாரி<br>அப் 16:31–34 | கேட்டனர்<br>16:31,32 | விசுவாசித்தனர்<br>16:31 | | | திருமுழுக்கு பெற்றனர்<br>16:33 |
| 9 | கொரிந்தியர்கள்<br>அப் 18:8 | கேட்டனர்<br>18:8 | விசுவாசித்தனர்<br>18:8 | | | திருமுழுக்கு பெற்றனர்<br>18:8 |
| 10 | எபேசுவில் 12 பேர்<br>அப் 19:1–7 | கேட்டனர்<br>19:5 | | | | திருமுழுக்கு பெற்றனர்<br>19:5 |
| | **போதித்தல்**<br>**ரோமர் 10:17; கலா 1:6–9** | **கேள்விபடுதல்**<br>**மாற் 4:23; அப் 10:22** | **விசுவாசித்தல்**<br>**எபி 11:6; எபி 5:8–9** | **மனந்திரும்புதல்**<br>**லூக் 13:3,5; அப் 2:38** | **அறிக்கையிடுதல்**<br>**ரோம 10:10; மத் 10:32–33** | **ஞானஸ்நானம்**<br>**1 பேதுரு 3:21** |

# சபையின் ஸ்தாபிதம் (தோற்றம்)
## The Establishment of the Church

நமது கடந்த பாடத்தில் **ஏசாயா 2:2,3லும், யோவேல் 2:28, 29–லும், தானியேல் 2:44–லும்** கர்த்தருடைய அரசாட்சி (அல்லது சபை) கடைசி நாட்களில், எருசலேமில், ஆவியின் வருகையின்போது நிறுவப்பட்டு, எல்லா நாட்டு மக்களும் அதற்குள் ஓடி வருவார்கள் என்றும், அது என்றென்றைக்கும் நிற்கும் எனவும் கண்டோம். பின்பு **மத்தேயு–16:18, மாற்கு 9:1, லூக்கா 24:46–49,** ஆகிய வசனங்களில், கிறிஸ்து வாக்குத்தத்தம் செய்து, தமது சபையை தானே கட்டுவதாகவும், சபை பெலத்தோடே வரும் என்றும், மேலும் மனந்திரும்புதலும், பாவ மன்னிப்பும் கிறிஸ்துவினுடைய நாமத்தில் சகல தேசத்தாருக்கும் பிரசங்கிக்கப் படவேண்டியது என்றும் கூறினார். **அப்போஸ்தலர் 2–ம்** அதிகாரத்திற்கு நாம் திருப்பினால், இந்த அதிகாரத்தில் மாத்திரம் மேற்குறித்த அனைத்து தீர்க்கதரிசனங்களும் வாக்குத்தத்தங்களும் நிறைவேறியிருப்பதை கண்டுபிடிக்கலாம்.

**அப்போஸ்தலர் 2–ம்** அதிகாரத்தை நாம் படிக்கும்போது, அந்த நேரத்தில் கிறிஸ்துவின் அப்போஸ்தலர்கள் அனைவரும் எருசலேமில் இருந்தனர். "பெந்தகோஸ்தே (50வது நாள்) என்னும் நாள் வந்தபோது, அவர்களெல்லாரும் ஒரு மனப்பட்டு ஓரிடத்தில் வந்திருந்தார்கள். அப்பொழுது பலத்த காற்று அடிக்கிற முழக்கம்போல, வானத்திலிருந்து சடிதியாய் ஒரு முழக்கமுண்டாகி அவர்கள் உட்கார்ந்திருந்த வீடு முழுவதையும் நிரப்பிற்று. அல்லாமலும் அக்கினிமயமான நாவுகள் போலப் பிரிந்திருக்கும் நாவுகள் அவர்களுக்குக் காணப்பட்டு, அவர்கள் ஒவ்வொருவர் மேலும் வந்து அமர்ந்தது. அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத் தொடங்கினார்கள். வானத்தின் கீழிருக்கிற சகல தேசத்தாரிலுமிருந்து வந்த தேவபக்தியுள்ள யூதர்கள் அப்பொழுது எருசலேமிலே வாசம் பண்ணினார்கள். அந்த சத்தம் உண்டானபோது, திரளான ஜனங்கள் கூடிவந்து, தங்கள் தங்கள் பாஷைகளிலே அவர்கள் பேசுகிறதை அவரவர்கள் கேட்டபடியினாலே கலக்கமடைந்தார்கள்." **(அப். 2:1–6).** தொடர்ந்து கூறுகையில், அநேக தேசத்தார் கூடி வந்திருந்த போது, "எல்லாரும் பிரமித்து சந்தேகப்பட்டு, இதென்னமாய் முடியுமோ என்று ஒருவரோடொருவர் சொல்லிக் கொண்டார்கள். மற்றவர்களோ அவர்கள் மதுபானத்தினால் நிறைந்திருக்கிறார்களென்று பரியாசம் பண்ணினார்கள். அப்பொழுது பேதுரு பதினொருவரரோடுங்கூட நின்று, அவர்களை நோக்கி, உரத்த சத்தமாய்; யூதர்களே, எருசலேமில் வாசம் பண்ணுகிற ஜனங்களே, நீங்களெல்லாரும் அறிந்து கொள்வீர்களாக, என் வார்த்தைகளுக்குச் செவிகொடுங்கள். நீங்கள் நினைக்கிறபடி இவர்கள் வெறிகொண்டவர்களல்ல, பொழுது விடிந்து (காலை 9 மணி) மூன்றாம் மணி வேளையாயிருக்கிறதே தீர்க்கதரிசியாகிய யோவேலினால் உரைக்கப்பட்டபடியே இது நடந்தேறுகிறது... அப்பொழுது கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுகிறவனெவனோ அவன் இரட்சிக்கப்படுவான் என்று தேவன் உரைத்திருக்கிறார்" **(அப்போஸ்தலர் 2:12–16, 21)**.

பழைய ஏற்பாட்டு இந்த தீர்க்கதரிசனங்களின் அனைத்தும் நிறைவேறியதை காட்டிய பிறகு, பேதுரு தனது பிரசங்கத்தை தொடருகிறார். தேவன் பலத்த செய்கைகளாலும், அற்புதங்களாலும், அடையாளங்களாலும் இயேசுவை அவர்கள் நடுவிலே வெளிப்படுத்தினார் என காட்டுகிறார். அடுத்து, கிறிஸ்து ஆலோசனை சங்கத்தாரிடம் ஒப்புக் கொடுக்கப்பட்டதையும், அக்கிரமக்காரர்களின் கைகளினால் அவர் சிலுவையில் ஆணியடித்துக் கொலை செய்யப்பட்டதையும் கூறுகிறார். பிறகு தேவன், மரணத்தினின்று இயேசுவை எழுப்பியதையும், மரண வாதையிலிருந்து அவரை விடுதலையாக்கினதையும் குறிப்பிடுகிறார். தனக்கு முன்பிருந்த கூட்டத்தாரை ஏற்றுக்கொள்ளச் செய்ததை சுட்டிக்காட்டி, கிறிஸ்து மரித்து அடக்கம் பண்ணப்பட்டு, உயிர்த்தெழுந்து பரமேறிப்போன காரியங்களை குறிப்பிட்டு, அவர் தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருப்பதைக் காட்டுகிறார்.

தொடர்ந்து அவர் **(பேதுரு 11).** இந்த இயேசுவை தேவன் எழுப்பினார். இதற்கு நாங்கள் எல்லோரும் சாட்சிகளாயிருக்கிறோம். அவர் தேவனுடைய வலது கரத்தினாலே உயர்த்தப்பட்டு, பிதா அருளிய வாக்குத் தத்தத்தின்படி பரிசுத்த ஆவியைப் பெற்று, நீங்கள் இப்பொழுது காண்கிறதும், கேட்கிறதுமாகிய இதைப்

பொழிந்தருளினார். தாவீது பரலோகத்திற்கு எழுந்து போகவில்லையே. நான் உம்முடைய சத்துருக்களை உமக்கு பாதபடியாக்கிப் போடும் வரைக்கும், நீர் என் வலது பாரிசத்தில் உட்காருமென்று கர்த்தர் என் ஆண்டவருடனே சொன்னார். என்று அவனே சொல்லியிருக்கிறான். ஆகையினால், நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த இயேசுவையே தேவன் ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கினாரென்று இஸ்ரவேல் குடும்பத்தார் யாவரும் நிச்சயமாய் அறியக் கடவர்கள் என்றான்.

இதை அவர்கள் கேட்ட பொழுது, இருதயத்திலே குத்தப்பட்டவர்களாகி பேதுருவையும் மற்ற அப்போஸ்தலரையும் பார்த்து சகோதரரே, நாங்கள் என்ன செய்ய வேண்டும்? என்றார்கள். பேதுரு அவர்களை நோக்கி; நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவமன்னிப்பிற்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள். வாக்குத்தத்தமானது உங்களுக்கும் உங்கள் பிள்ளைகளுக்கும் நம்முடைய தேவனாகிய கர்த்தர் வரவழைக்கும் தூரத்திலுள்ள யாவருக்கும் உண்டாயிருக்கிறது என்று சொல்லி, இன்னும் அநேக வார்த்தைகளாலும் சாட்சி கூறி மாறுபாடுள்ள இந்த சந்ததியை விட்டு விலகி உங்களை இரட்சித்துக் கொள்ளுங்கள் என்றும் புத்தி சொன்னான். அவனுடைய வார்த்தையை சந்தோஷமாய் ஏற்றுக் கொண்டவர்கள், ஞானஸ்நானம் பெற்றார்கள். அன்றைய தினம் ஏறக்குறைய மூவாயிரம் பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள் தேவனைத் துதித்து, ஜனங்களெல்லாரிடத்திலும் தயவு பெற்றிருந்தார்கள். இரட்சிக்கப்படுகிறவர்களை கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்து கொண்டு வந்தார். **(அப். 2:32–41, 47).**

மேற்கொண்டு தொடர்ந்து வரும வசனங்களில் சபை நிறுவப்பட்டது என்பதையும், இவைகள் அனைத்தும் எருசலேமில் நடந்த சம்பவங்கள் என்பதையும் கவனித்திருப்பீர்கள். பரிசுத்த ஆவியின் பெலன் அப்போஸ்தலர்கள் மீது ஊற்றப்பட்டது. நடந்தவைகள் அனைத்தும் பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசன நிறைவேற்றமே. தீர்க்கதரிசியாகிய யோவேலினால் உரைக்கப்பட்டபடியே இது நடந்தேறுகிறது என்று பேதுரு குறிப்பாய்ச் சொன்னார் **(அப். 2:16).** எனவே, இதில் சந்தேகமில்லை. மேலும், தீர்க்கதரிசிகள் கடைசி நாட்களில் இவைகள் சம்பவிக்கும் என்று கூறியிருப்பதாலும், தீர்க்கதரிசிகளால் உரைக்கப்பட்டபடியே அது நடந்தேறுவதாக பேதுரு கூறுவதாலும், சபை கடைசி நாட்களில் ஸ்தாபிக்கப்பட்டது. சகல தேசத்தாரும் அந்த நாளிலே கூடியிருந்தனர். மனந்திரும்புதலும் பாவ மன்னிப்பும் பிரசங்கிக்கப்பட்டு, 3000 பேர் வசனத்திற்கு கீழ்ப்படிந்து, இரட்சிக்கப்பட்டு, சபையிலே சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். ஆகையால், கிறிஸ்து சபையை எருசலேமில் கி.பி. 33ல் நிறுவினார். அது இன்றும், என்றும் நிலைத்திருக்கும்.

## வாசகர்களின் கவனத்திற்கு

அன்பான வாசகர்களே!
உங்கள் ஆண்டு சந்தா தொகையை
G-Pay, PhonePe மூலம் அனுப்பி
உங்கள் சந்தாவை
புதுப்பித்துக் கொள்ளவும்.
நன்றி!

ஆண்டு சந்தா : ரூ. 120/-
No. 92 4421 4421

**வங்கிக் கணக்கில் செலுத்த,**

A/c Name : Kirubaiyulla Varthai
A/c No. : 57022317422
IFSC Code : SBIN0011068
Branch : SBI - Bye Pass Road Branch, Madurai.

# தைரியமான பேதுரு

கர்த்தருக்கு பிரியமான அன்பு செல்லங்களா ! எல்லாரும் எப்படி இருக்கிறீர்கள்? நல்லா இருக்கிறீர்களா? இப்பொழுது நாம் பேதுரு அண்ணணைப் பற்றி ஒரு காரியத்தினை இம்மாதம் கற்றுக்கொள்வோமா?

ஆண்டவர் இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்த 50 நாளில், யூதர்களின் பெந்தெகோஸ்தே பண்டிகை வந்தது. அந்த நாளில் உலகமெங்கும் உள்ள யூதர்கள், பண்டிகை கொண்டாட எருசலேம் நகருக்கு வருவது வழக்கமான ஒன்று. அந்த நாளில், அப்போஸ்தலர்கள் அனைவரும் ஆண்டவருடைய கட்டளைபடி எருசலேமில் ஓரிடத்தில் கூடியிருந்தனர்.

அப்பொழுது பயங்கரமாக காற்று அடிக்கின்ற சத்தம் போல வானத்திலிருந்து ஒரு சத்தம் திடீரென உண்டானது. நெருப்பு நாவுகள் போல நாவுகள் அவர்களுக்கு காணப்பட்டு, அவர்கள் மேல் அமர்ந்தது. அப்போஸ்தலர்கள் அனைவரும் பரிசுத்த ஆவியானவராலே நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக்கு கொடுத்த வரத்தின்படியே ஒவ்வொருவரும் வெவ்வேறு மொழிகளில் பேசினார்கள்.

இதைக்கேட்ட பண்டிகைக்கு வந்திருந்த மற்ற யூதர்கள் அனைவரும் பயந்தார்கள். ஏனெனில், அப்போஸ்தலர்கள் அனைவரும் கலிலேய மாகாணத்தினை சேர்ந்தவர்கள், மற்றும் படிப்பறிவு குறைவானவர்கள். பண்டிகைக்கு வந்திருந்த பல்வேறு நாட்டு மக்களும் தங்கள் தாய்மொழிகளில் இவர்கள் கர்த்தருடைய மகிமையைக் குறித்து பேசினதை கேட்டு, எல்லாரும் ஆச்சரியப்பட்டு, ஒருவரையொருவர் பார்த்து: இதோ, பேசுகிற இவர்களெல்லாரும் கலிலேயரல்லவா? அப்படியிருக்க, நம்மில் அவரவர்களுடைய ஜென்ம பாஷைகளிலே இவர்கள் பேசக் கேட்கிறோமே, இதெப்படி? என்றனர்.



முன்பு 'இயேசுவின் சீடன்' என்று சொன்னால் கொன்றுவிடுவார்கள், என பயந்து ஆண்டவரை மறுதலித்த பேதுரு, இப்பொழுது தைரியமாக நின்று யூதர்களை பார்த்து, 'நீங்கள் தான் மேசியாவாகிய இயேசுவை சிலுவையில் அறைந்து கொலை செய்தீர்கள்! சர்வவல்ல பிதா அவரை எழுப்பி, அவரை ஆண்டவரும் கிறிஸ்துவுமாக உயர்த்தினார்' என்று சொன்னார். யூத மக்கள் தங்கள் இருதயத்தில் குத்தப்பட்டவர்களாகி, 'நாங்கள் என்ன செய்ய வேண்டும்?' என்று கேட்டார்கள். 'ஆகையால், நீங்கள் மனந்திரும்பி உங்கள் பாவம் மன்னிக்கப்பட திருமுழுக்கு பெறுங்கள்' என பேதுரு பேசினார். அவரது பிரசங்கத்தினை கேட்ட மக்கள், ஏறக்குறைய 3000 பேர் திருந்தி (மனம்திரும்பி) திருமுழுக்கு பெற்றனர்.

கர்த்தருக்கு பிரியமான பிள்ளைகளே! நீங்கள் ஏதாவது தவறு செய்யும் போது, உங்கள் அப்பாவோ, அம்மாவோ, ஊழியரோ, ஆசிரியரோ உங்கள் தவறை சுட்டிகாட்டி சரிசெய்ய முயற்சிக்கும் போது, நீங்கள் செய்த தப்பினை மறைக்கிறீர்களா? அல்லது, கடவுள் அவர்கள் மூலம் உங்களை உணர்த்தும் போது மன்னிப்பு கேட்டு திருந்துகிறீர்களா? பாருங்கள், பேதுரு அண்ணன் வசனத்தை தைரியமாக சொன்னார். நாமும் ஆண்டவரை இந்த உலகத்தில் உள்ள ஒவ்வொருவரிடம் சொல்ல வேண்டும். பயம், கூச்சம் மற்றும் கவலை படக்கூடாது. தைரியமாக சொல்வோம்!

**மனப்பாட வசனம் : மாற்–16:15** "பின்பு, அவர் அவர்களை நோக்கி; நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்."

**– அன்பு ஏசுதாஸ்**

# இரத்த சாட்சியான ஸ்தேவான்




ஹாய் குட்டீஸ் ! உயிர்த்தெழுந்த ஆண்டவர் கிறிஸ்துவின் நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன். இந்த மாதம், சபைக்காக தன் உயிரைக்கொடுத்த ஒருவரைப்பற்றி படிக்கப்போகிறோம்.

இவர், எருசலேமில் இருந்த கிறிஸ்துவின் சபையில், பந்தி விசாரணை செய்யும்படி தேர்ந்தெடுக்கப்பட்ட உதவிக்காரர்கள் ஏழு பேரில் ஒருவர். இவர் விசுவாசத்திலும் வல்லமையிலும் நிறைந்தவராயிருந்து பெரிய அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்து வந்தார். அவர் பெயர் என்ன தெரியுமா? **ஸ்தேவான்**.

இவர், இயேசுகிறிஸ்துவை, தேவனுடைய குமாரன் என்று பிரசங்கித்ததை பிடிக்காத யூத மத தலைவர்கள், ஜனங்களையும் வேதபாரகரையும் மூப்பரையும் அவனுக்கு விரோதமாக எழுப்பிவிட்டு, அவனை ஆலோசனை சங்கத்தில் கொண்டுபோய் நிறுத்தி, இவன் இந்த பரிசுத்த இடத்திற்கும் வேதப் பிரமாணத்துக்கும் விரோதமாக தூஷணமான வார்த்தைகளை ஓயாமற் பேசுகிறான் என்று குற்றஞ் சாட்டினார்கள்.

ஸ்தேவான், ஆலோசனை சங்கத்தில் எல்லார் முன்பும் பயமில்லாமல் பேச தொடங்கினான். அவன் ஆபிரகாமை கர்த்தர் சந்தித்ததிலிருந்து தொடங்கி ஈசாக்கு, யாக்கோபு, மோசே, தாவீது, சாலொமோன் தீர்க்கதிரிகள் வரைக்கும் ஏறக்குறைய 2000 ஆண்டு வரலாற்றை சொல்லி, அவர்கள் பாவத்தினை சுட்டிக்காட்டி பேசினான். முன்பு எப்படி உங்கள் பிதாக்கள் தீர்க்கதரிசிகளுக்கு செவிகொடாமல் அவர்களை துன்பப்படுத்தினார்களோ, அதைப்போல நீங்களும் நீதிபரராகிய இயேசுவை கொலை செய்தீர்கள் என்று சொன்னான். இதை கேட்டவுடன் அவர்கள் மூர்க்கமடைந்து, தங்கள் பற்களைக் கடித்து கொண்டு, காதுகளை அடைத்து,



அவனை ஊருக்கு வெளியே கொண்டுபோய், அவன் சாகுமட்டும் அவன் மேல் கல்லெறிந்தார்கள். அப்பொழுதும் ஸ்தேவான் முழங்காற்படியிட்டு ஆண்டவரே, இவர்கள்மேல் இந்த பாவத்தைச் சுமத்தாதிரும் என்று மிகுந்த சத்தமிட்டுச் ஜெபம் செய்து, சபைக்காகவும், இயேசு கிறிஸ்துவின் மீதிருந்த விசுவாசத்திற்காகவும், மரித்த முதல் இரத்தச் சாட்சியாக தன் உயிரை தியாகம் செய்தான்.

குட்டீஸ்! சபை என்பது நமது ஆண்டவர் இயேசுவிற்கும், பரலோக பிதாவிற்கும் மிகவும் முக்கியமான ஒன்று. ஆகையால், நாமும் ஸ்தேவானை போல இந்த பூமியில் வாழும் ஒவ்வொரு நாளும் சபையை முக்கியமாக நினைத்து வாழ்வோம். சபை கூடி வருகின்ற எல்லா நிகழ்ச்சியிலும் பங்கு பெறுவோம்.

**மனப்பாட வசனம் : எபி 10:25** "சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறதுபோல நாமும் விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்திசொல்லக்கடவோம்; நாளானது சமீபித்து வருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய்ப் புத்தி சொல்ல வேண்டும்."

**– குயினி பிரதீப்**


# சிறைச்சாலை அதிகாரி



அன்பான மழலை செல்லங்களுக்கு, ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் பெயரால் அக்காவின் அன்பின் வாழ்த்துக்கள். மீண்டும் பள்ளி ஆரம்பித்தது உங்களுக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருக்கும். அந்த மகிழ்ச்சியுடனே கவனமாக இருங்கள். முக கவசம் அணியுங்கள்; கைகளை அடிக்கடி சுத்தம் செய்யுங்கள்; ஆசிரியர், அம்மா அப்பா, அரசாங்கம் சொல்வதைக் கேட்டு கவனமாக நடவுங்கள்.

இந்த மாதம் நாம், அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தில் சொல்லப்பட்டுள்ள சிறைச்சாலை அதிகாரி ஒருவரைப் பற்றி தெரிந்துகொள்வோமா?

அப்போஸ்தலனாகிய பவுலிற்கு கர்த்தர், தரிசனத்திலே மக்கதோனியா நாட்டிற்கு சென்று நற்செய்தி சொல்ல அழைத்தபோது, பவுல் அண்ணன், சில்வான் என்ற சீலா என்ற அண்ணனையும் அழைத்து சென்று, பிலிப்பி என்ற



பட்டணத்திலே ஊழியம் செய்தனர். அங்கே அநேகர் வசனத்தினை கேட்டு திருந்தினர். பவுல், அந்த ஊரில் அசுத்த ஆவி உள்ள ஒரு பெண்ணை ஆண்டவரின் நாமத்தினாலே சுகப்படுத்தினார்.

அந்த அசுத்த ஆவியுள்ள பெண்ணை வைத்து சம்பாதித்த முதலாளிகள், பவுலின் மீதும் சீலாவின் மீதும் பொய் குற்றம் சாட்டி, அடித்து, சிறையில் போடுவித்தனர். நடுராத்திரியில் பவுலும், சீலாவும் ஜெபம் செய்து, கர்த்தரை துதித்துப் பாடினார்கள். சிறைச்சாலை கதவுகள் உடைந்தது, அவர்களுடைய கட்டுகள் தளர்ந்தது. நடந்ததை கண்ட சிறைச்சாலை அதிகாரி, அனைவரும் தப்பிவிட்டனர் என நினைத்து, தற்கொலை செய்ய முயற்சித்தார். பவுல் அவனை தடுத்து, 'நாங்கள் தப்பிக்கவில்லை இங்கே தான் இருக்கின்றோம்' என சொன்னார்.

சிறைச்சாலை அதிகாரி பவுலையும், சீலாவையும் தன் வீட்டிற்கு அழைத்துச் சென்று, அவர்களுடைய காயங்களை கழுவி சுத்தம் செய்தான். அது மாத்திரமல்ல, இப்படிப்பட்ட அற்புதத்தினை கண்ட அந்த அதிகாரி, அவர்களை நோக்கி; 'நான் இரட்சிக்கப்பட என்ன செய்ய வேண்டும்' என கேட்டார். அந்த நடுராத்திரியில் தன் குடும்பத்தினருடன் அமர்ந்து வசனம் கேட்டார். கேட்ட வசனத்திற்கு உடனே குடும்பமாக கீழ்ப்படிந்தார்.

மழலைச் செல்லங்களே! நாமும் ஆண்டவருடைய வார்த்தைகளை கேட்பதில் ஆர்வமுடையவர்களாகவும், அதற்கு உடனே கீழ்ப்படிகிறவர்களாகவும் இருக்க வேண்டும்.

செய்வீர்கள் தானே?

**மனப்பாட வசனம் : யாக்கோபு 1:22** "அல்லாமலும், நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்குத் திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்தரமல்ல, அதின்படி செய்கிறவர்களாயும் இருங்கள்."

**– பிரியா ஆண்டனி**


## Gospel Through Media by World Evangelism Team

**Philemon Rajah & Kingsly in Tamil on Tamilan TV :** Every Sunday 7.00 - 7.15 a.m (TAMILNADU Contact Mobile : 92 4421 4421 & 92 4431 4431) **Nambikai TV :** Every Sunday 3.30 p.m. **Salvation TV :** Every Sunday 2.00 p.m.

**Rajnayagam & Benny Martin in Tamil on Tamilan TV :** Every Monday 7.00 - 7.15 a.m., Every Thursday 9.30 - 10.00 a.m. and Every Saturday 7.15 - 7.30 a.m. - Contact : 98427 30382

**Arjunan in Tamil on Nambikai TV & Radio :** TV : Every Monday & Saturday 7.30 - 7.45 p.m. Radio : Every Saturday 5.30 - 5.45 p.m. on 25 and 45 meter band of Sri Lanka Radio. (TAMILNADU Contact Mobile : 94435 58041)

**Joshua & Ricky Gootam in Telugu on Subhavartha, Aradharana TV :** Every Sunday 6.00 p.m. and Saturday 8.00 a.m. **Rakshana T.V :** Every Wednesday 6.30 p.m. and Thursday 2.30 a.m. (ANDRAPRADESH Contact Phone : 08842363722)

**P.R. Swamy & Douglas in Tamil on Radio :** Every Sunday to Wednesday at 5.30 - 5.45 p.m. on 25 and 45 meter band of Sri Lanka Radio. (KARNATAKA Contact Mobile : 098440 70763)

**P.K. Varghese in Malayalam on JaiHind TV :** Every Saturday 6.00 - 6.30 a.m. on Jai Hind Channel. (KERALA Contact Mobile : 94470 35465)

**Sunny, Francis & Vinay David in Hindi on Shubh Sandesh TV :** Every Tuesday 7.00 - 7.30 on Shubh Sandesh Hindi Channel.

## நவம்பர் மாத கேள்விகள்

1. அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகம் எழுதியது யார், யாருக்கு எழுதினார்?
2. இந்த புத்தகம் ஏறக்குறைய எத்தனை ஆண்டு வரலாற்றை பதிவு செய்துள்ளது?
3. ஒருவர் இரட்சிக்கப்பட ஏன் சத்தியத்தை முதலாவது கேட்க வேண்டும்?
4. முதல் நூற்றாண்டு சபையார் எவைகளில் உறுதியாக தரித்திருந்தார்கள்?
5. சிதறப்பட்டவர்கள் எங்கும் திரிந்து என்ன செய்தார்கள்?
6. பவுல் பேலிக்ஸிடம் எதை குறித்து பேசினார்?
7. தியாத்திரா ஊரை சேர்ந்த இரத்தாம்பரம் விற்கின்ற பெண் யார்?
8. ஆறுதலின் மகன் என அழைக்கப்பட்டவர் யார்?
9. முதன் முதலில் யார், எங்கே 'கிறிஸ்தவர்கள்' என அழைக்கப்பட்டனர்?
10. இரட்சிக்கப்படுகிறவர்களை கர்த்தர் என்ன செய்தார்?

**பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் : 5-12-2021**

**அனுப்ப வேண்டிய முகவரி : சகோதரி பேபி ராஜா**
45C/1, சர்ச் லேன், காரனேசன் தெரு,
அரசரடி, மதுரை – 625 016
செல் : 92 4421 4421, 92 4431 4431

### சென்ற இதழ் பதில்கள்

1. தானியேல் 6:28
2. மாற்கு 7:20, 23 மத் 15:18
3. 1 கொரி 16:19
4. ஏசா 58:7
5. 1 பேதுரு 3:5
6. எபி 11:31
7. நீதிமொழி 21:31
8. மத் 18:19
9. 1 கொரி 15:47
10. 1 யோவான் 5:4

### சென்ற இதழ் கேள்விகளுக்கு பதில் எழுதியவர்கள்


1. Mrs. ஹெலன் திலக் – மதுரை
2. Mr. M.S. ஜேம்ஸ் – திண்டுக்கல்
3. Mrs. ஜெபசீலி ஜெயக்கொடி – திருச்சி
4. Mrs. ஹெப்ஸிபா தாமஸ் – படப்பை
5. Mrs. தெல்மா ஸ்டான்லி – மதுரை
6. S. அசோக்குமார் பிரின்ஸ் – தூத்துக்குடி
7. Mrs. G. ஏஞ்சலம்மாள் – மதுரை
8. S. அன்னதாய் ஆல்பர்ட் – தூத்துக்குடி
9. R. சரோஜா – தென்கலம்
10. J. விஜய் – மதுரை
11. P. சூரியபிரியா – திருமங்கலம்
12. Mrs. புளோரா சுந்தர் – மதுரை
13. Mrs. இந்திரா பாண்டி – திருமங்கலம்
14. Mrs. D.I. அன்பு சுதந்திரம் – ஏர்வாடி
15. J. சுந்தரபாய் வில்லியம் – சேலம்
16. Mrs. சாந்தி வில்லியம் – புதுக்கோட்டை
17. Mrs. வைலட் கிறிஸ்டோபர் – தளவாய்புரம்
18. Dr. இவாஞ்சலின் ஜோன்ஸ் – சேலம்
19. Mrs. P. சமாதானம் பீட்டர் – திருச்சி
20. G. பீற்றர் பால்ராஜ் – ஆறுமுகநேரி
21. Mrs. S. பாக்கியராஜம் – மதுரை
22. Mr. A. ஆனந்த கதிரோன் – சென்னை
23. Mrs. A. இமல்டா சுந்தர்சிங் – ஈரோடு
24. Mrs. ராணி சாந்தகுமார் – மதுரை
25. A. டேவிட் விஸ்வநாதன் – பொள்ளாச்சி
26. Mrs. ஸ்டெல்லா ஜெபக்குமார் – நெல்லை
27. A.G. சாமுவேல் – தூத்துக்குடி
28. S. சூசை மரியான் – சென்னை
29. Mrs. சாந்தி ஜோயல் – திருச்சி
30. Mr. ஜெபர்சன் – திண்டுக்கல்
31. Mr. டேவிட் சாந்தகுமார் – செங்கோட்டை
32. Mrs. ஜெயமணி ராஜாம்மாள் – கடலூர்
33. D. மீனாள் – மூலனூர்
34. Mrs. ஜாய்ஸ் ஜோசுவா – வெள்ளறம்
35. Mrs. மேரிராஜ் – மதுரை
36. D. வர்ஷினி – மூலனூர்
37. Mrs. நாகலிங்கம் சித்ரா – திருச்சி
38. Mrs. காந்தா மனோகரன் – திருச்சி
39. Mrs. A. ரோஸ்மேரி – சென்னை
40. Mrs. குளோரி திலகவதி – சென்னை
41. Mrs. K. ராணி மூர்த்தி – நெல்லை
42. J. ரேவதி ஜெயச்சந்திரன் – கரிமேடு
43. P. பரமேஸ்வரி – மூலனூர்
44. Mrs. M. ஜெனி – கரூர்
45. D. தேன்மொழி – மூலனூர்
46. D. விக்னேஷ் – மூலனூர்
47. R.P. டேவிட் – சேலம்
48. Mr. G.J. அப்பாதுரை – நெல்லை
49. J. ஜான்சி – ஆனைமலை
50. Mrs. லீலா ஜோசப் – கோவை
51. Mrs. செல்வமணி – சேலம்
52. Mrs. ஞான சிரோன்மணி – மதுரை
53. P. வசந்த் – குன்னூர்

Place of Publication : **Arasaradi, Madurai**
**Printed & Published by P.C. PHILEMON RAJAH**
**Printed at Classic Printers & Binders Madurai-2 ✆ 94421 23819**
**Registered News Paper No. : TNTAM/2011/42166**
**Postal Registration No. : TN/MA/67/2021 - 2023**
**Date of Publication : 8th November 2021**
**Posted at Arasaradi HPO on 10th 11th October 2021**


## கிருபையுள்ள வார்த்தை வெளியிட்டுள்ள சிறப்பு புத்தகங்கள்










அன்பார்ந்த வாசகர்களே! இந்த அனைத்து புத்தகங்களையும் உங்கள் ஆத்மீக வளர்ச்சிக்கு பயன்படுத்திக்கொள்ளும்படி வேண்டுகிறோம். ரூபாய் 100/-மட்டும் அனுப்பி இப்புத்தக தொகுப்பை பெற்றுக்கொள்ளுங்கள்!

## தபால் வழி பைபிள் பாடங்கள்






## கைபிரதிகள்









உங்கள் சுவிசேஷ ஊழியத்திற்கு கைபிரதிகள் பல்வேறு தலைப்புகளில் பாதி விலையில் கிடைக்கும். விபரங்களுக்கு : 92 4421 4421, 92 4431 4431


## BIBLE STUDY BOOKS IN ENGLISH











AVAILABLE FOR SPECIAL PRICE!


**If undelivered please return to :**

**EDITOR**
**KIRUBAIYULLA VAARTHAI**

45 C/1, Church Lane,
Coronation Street, Arasaradi,
Madurai - 625 016. India
E-mail : obey2jesus@gmail.com
Cell : 92 4421 4421, 92 4431 4431

To

Visit www.graciousword.org to read kv magazine online
follow us in facebook : NT Gospel Restorers